செய்தி வெளியீடு

நாள். **20.08.2019**

**தமிழகத்தில் உள்ள மாநகராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் சீர்மிகு நகர திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு எஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், தமிழகத்தில் திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலி, திருப்பூர், ஈரோடு, தஞ்சாவூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சிகளில் செயல்படுத்தி வரும் சீர்மிகு நகர திட்டங்கள் **(Smart City)** செயல்பாடுகள் குறித்து **19.8.2019** அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் அம்மா மாளிகையில் விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

**<u>சீர்மிகு நகர திட்டங்கள் (Smart City)</u>**

இந்தியா முழுவதும் **100** நகரங்களை தேர்ந்தெடுத்து, அதனை சீர்மிகு நகரங்களாக உருவாக்கும் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த முனைந்த நேரத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் காரணமாக, தமிழகத்தில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, தஞ்சாவூர், சேலம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் ஈரோடு ஆகிய **11** நகரங்கள், சீர்மிகு நகரங்களாக உருப்பெற தேர்ந்தெடுக்கப்பட்டன.

மத்திய அரசு இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு சீர்மிகு நகரத்திற்கும் **500** கோடி ரூபாய் நிதியுதவி வழங்குகிறது. மத்திய அரசிற்கு இணையாக, தமிழக அரசும், **500** கோடி ரூபாய் நிதியுதவி வழங்குகிறது.

தமிழகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட **11** சீர்மிகு நகரங்களில், மொத்தம் ரூ.**10,440** கோடி மதிப்பீட்டில் **357** திட்டங்கள் மத்திய அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**அனுமதிக்கப்பட்ட 357 திட்டங்களில்,**

- **57** திட்டங்கள் – ரூ.**240** கோடியில் முடிக்கப்பட்டுள்ளன,
- **184** திட்டங்கள்– ரூ.**5,340** கோடியில் நடைபெற்று வருகின்றன,
- **10** திட்டங்கள் – ரூ.**575** கோடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கூராய்வு நிலை
- **18** திட்டங்கள் – ரூ.**439** கோடியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன

- 15 திட்டங்கள், ரூ.625 கோடியில் ஒப்பந்தபுள்ளி கோரப்படவேண்டிய நிலையில் உள்ளன.
- 5 திட்டங்கள் ரூ 728 கோடியில் விரிவான திட்ட அறிக்கை கூராய்வு நிலை.
- 68 திட்டங்கள் ரூ.2,493 கோடியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது.

**இந்திய அளவில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சீர்மிகு நகர திட்ட செயலாக்கத்தில் தமிழகம் 120.72 புள்ளிகளுடன் 7 வது இடத்தில் உள்ளது.**

மேற்படி இரண்டு திட்டங்களையும் மாநகராட்சி விரிவான ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைபெற்று வரும் பணிகளை, குறிப்பிட்ட காலவரையில் முடிக்கப்பட வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளி கூராய்வில் உள்ள இனங்களை விரைவுபடுத்தி, பணிகள் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும், ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ள அனைத்து திட்டங்களும் 30.09.2019க்குள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மேலும், நிலுவையில் உள்ள திட்டங்களுக்கு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை விரைந்து முடித்து 01.10.2019க்குள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டும் எனவும், அனைத்து திட்டங்களையும் உயர் அலுவலர்கள் அடிக்கடி ஆய்வு செய்து திட்டங்களின் தரத்தினை உறுதி செய்ய வேண்டும் எனவும்,

பணிகள் அமல்படுத்துவதில் ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின் உடனுக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையர்/அரசு முதன்மை செயலர் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு தெரிவித்து, திட்ட அறிவித்த நாளில் இருந்து 5 வருடங்களுக்குள் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்பதனைக் கவனத்தில் கொண்டு அனைத்து அலுவலர்களும் செயல்பட வேண்டும் எனவும் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் (பொறுப்பு) திரு.கா.பாஸ்கரன் இ.ஆ.ப., சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர்

டாக்டர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையரக கூடுதல் இயக்குநர்கள், தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகரப் பொறியாளர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : நகராட்சி நிர்வாக ஆணையரகம்**